Vikatan > Health > Policy

Published: 11 Nov 2023 8 AM    Updated: 11 Nov 2023 8 AM


# தீபாவளி: பட்டாசு, புகை, காற்று மாசு... ஆஸ்துமா, நுரையீரல் நோயாளிகள் கவனத்துக்கு!


க.ஆர்த்தி

FOLLOW US ON Google News




## லேட்டஸ்ட் செய்திகள்


'நவம்பர் 19 நிச்சயதார்த்தம்; விரைவில் திருமணம்!' சீரியலில் அடுத்த ஜோடி அரவிஷ் - ஹரிகா


பணம், தங்க ஆபரணங்களை வைத்து பூஜை... லட்சுமியின் வரவுக்காக கதவை திறந்து


ம.பி: 'எனக்கு ஓட்டு யாசகம் போடுங்கள்!' - முதல்வர் முன்னிலையில் கண்ணீர் விட்டு


திருமணத்தில் விபரீதமான துப்பாக்கி விளையாட்டு... மணமகள் முகத்தில் சீறிப்பாய்ந்த நெருப்பு!


Motivation Story: 600 பிள்ளைகளின் வாழ்வுக்காக 10 கின்னஸ் ரெக்கார்டுகளை

பட்டாசு புகை..ஆஸ்துமா நோயாளிகள் கவனத்துக்கு

Share

**நுரையீரல் பாதிப்புள்ளவர்கள் வீட்டில் இருக்கும்போது மத்தாப்பு போன்ற அதிக புகையை வெளியிடும் பட்டாசுகளை கொளுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அதே போல நுரையீரல் பிரச்னை இருப்பவர்களும் பட்டாசுகள் கொளுத்துவதைத் தவிர்த்துவிடுவது நல்லது.**

தீப ஒளித் திருநாள் என்று அழைக்கப்படும் தீபாவளி பண்டிகையில் தீபமும் ஒளியும் இருக்கிறதோ இல்லையோ கட்டாயம் ஒலியும் காற்று மாசும் இருக்கும். அதிக சத்தத்தில் பட்டாசுகளை வெடிக்கவிட்டு ஒலி மாசை ஏற்படுத்துவதுடன் செல்லப் பிராணிகளையும் நடுங்க வைத்துவிடுகிறோம்.

## பரிந்துரைக்கும் கட்டுரைகள்



அடிக்கடி பெண்ணுறுப்பில் இன்ஃபெக்‌ஷன்... என்ன காரணம்..? காமத்துக்கு மரியாதை | சீஸன் 4 - 119



நோய்க்கு குட்பை சொல்லும் பாதுகாப்பு வளையம்..! | மகிழ்ச்சி -7



Doctor Vikatan: அடிக்கடி வரும் யூரினரி இன்ஃபெக்‌ஷன்.... கிட்னியை பாதிக்க வாய்ப்பு உண்டா?



வெள்ளைப்படுதல்... உடை முதல் உணவுவரை அனைத்திலும் இருக்கட்டும் கவனம்



How To: தீபாவளி லேகியம், வீட்டிலேயே செய்வது எப்படி? I How To Make Deepavali Lekiyam At Home?



பட்டாசு

## Also Read



**டெல்லியில் அதிகரித்த காற்று மாசு; அதிக அளவில் குழந்தைகளைத் தாக்கும் புற்றுநோய்...**

அதே போல அதிக புகையை வெளியிடும் பட்டாசுகளைக் கொளுத்தி காற்று மாசை ஏற்படுத்துவது பலரின் உடல்நலத்தையும் மோசமாக்கிவிடுகிறது. குறிப்பாக, ஆஸ்துமா உள்ளிட்ட நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பட்டாசு புகை பிரச்னையைத் தீவிரப்படுத்திவிடும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

பட்டாசு புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்தும் அதிலிருந்து நுரையீரல் பிரச்னையால் பாதிக்கப்பட்டவர்கள் எப்படி தங்களைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்றும் விளக்குகிறார் சென்னையைச் சேர்ந்த நுரையீரல் மருத்துவர் திருப்பதி.



விகடன்
100
SUBSCRIBE
LOGIN
இதழ்கள் அரசியல் சினிமா ஆன்மிகம் பணம் ஆரோக்கியம் பசுமை விளையாட்டு சந்தா / புக்ஸ் செய்திகள் தொடர்கள் NEW
TRENDING The Marvels - விமர்சனம் Bigg Boss - Day 41 மிஸ்டர் கழுகு ஜிகர்தண்டா டபுள் X - விமர்சனம் ஜப்பான் - விமர்சனம் What to Watch Doctor Vi



பட்டாசுப் புகை

## Also Read




ஆன்லைன் வகுப்பு; பள்ளி விடுமுறை; வொர்க் ஃப்ரம் ஹோம்... டெல்லியில் காற்று மாசு கட்டுக்குள் வருமா?

"பொதுவாகவே நம் நாட்டில் காற்று மாசுபாடு அதிகரித்து வருகிறது. குறிப்பாக, டெல்லி போன்ற நகரங்களில் தீபாவளிக்கு சில வாரங்களுக்கு முன்பிலிருந்தே பட்டாசு புகை, வாகனப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் காற்று மாசுபாடு அதிகரித்து வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சென்னை போன்ற பெருநகரங்களில் டெல்லியைப்போல அதிக காற்று மாசுபாடு இல்லை என்றாலும் கணிசமான மாசுபாடு காணப்படுவதை மறுப்பதற்கில்லை.



ஆஸ்துமா நோயாளிகள்

மாசடைந்த காற்றுடன் பட்டாசுப்புகை சேரும்போது காற்றின் தரம் கடுமையாக பாதிக்கப்படும். இதன் விளைவு நேரடியாக நுரையீரலில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆஸ்துமா, பிஓபிடி (Persistent Obstructive

Pulmonary Disease) போன்ற பாதிப்புகள் இருப்பவர்களுக்கு பட்டாசுப் புகை ஒவ்வாமையை அதிகரித்து, மூச்சுவிடுவதில் சிரமத்தை ஏற்படுத்தும்.

மேலும் இருமல், மூச்சடைப்பு, அதிகமாக சளி உருவாகுதல் உள்ளிட்ட பாதிப்புகளையும் ஏற்படுத்தும். சில பட்டாசுகள் மிக அதிக அளவிலான புகையை ஏற்படுத்தும். உதாரணத்துக்கு பாம்பு மாத்திரை, மத்தாப்பு போன்றவை. இவையெல்லாம் சத்தத்துடன் வெடிக்கும் வகையைச் சேர்ந்த பட்டாசுகள் இல்லை என்பதால் உடலுக்கும் நல்லது என்று நினைக்கிறோம்.



நுரையீரல் மருத்துவர் திருப்பதி

## Also Read




**‘காற்று மாசுபட்ட சூழலில், 5 நாள் இருந்தாலே பக்கவாதம் ஏற்படலாம்’ - ஆய்வு சொல்லும் அதிர்ச்சி தகவல்!**

---

அதிக ஒலியை ஏற்படுத்தும் பட்டாசுகளைவிட அதிக காற்று மாசுபாட்டுக்குக் காரணமாக அமைவது இந்த வகைப் பட்டாசுகள்தான். ஆஸ்துமா உள்ளிட்ட நுரையீரல் பிரச்னை உள்ளவர்கள், அதிக நுரையீரல் பாதிப்புக்கு ஆக்ஸிஜன் பயன்படுத்துபவர்கள் ஆகியோர் பட்டாசு வெடிக்கும் நேரங்களில் வீட்டைவிட்டு வெளியே வராமல் இருப்பது மிகவும் நல்லது.

நுரையீரல் பாதிப்புள்ளவர்கள் வீட்டில் இருக்கும்போது மத்தாப்பு போன்ற அதிக புகையை வெளியிடும் பட்டாசுகளை கொளுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அதே போல நுரையீரல் பிரச்னை இருப்பவர்களும் பட்டாசுகள் கொளுத்துவதைத் தவிர்த்துவிடுவது நல்லது.




பட்டாசுப் புகை

ஒருவேளை பட்டாசு கொளுத்துவதாக இருந்தாலும் வீட்டுக்குள் வைத்துக் கொளுத்தக்கூடாது. நல்ல காற்றோட்டமான இடத்தில் மட்டுமே கொளுத்த வேண்டும். நீண்டநேரம் பட்டாசு புகையில் இருப்பதையும் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

நுரையீரல் பாதிப்பு உள்ளவர்கள் தீபாவளி போன்ற அதிக காற்று மாசுபாட்டை ஏற்படுத்தும் காலங்களில் தாங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளைத் தவறவிடக் கூடாது. மேலும் பிரச்னைக்கான நிவாரண

மருந்து மற்றும் தினமும் எடுத்துக்கொள்ள வேண்டிய மருந்துகள் என அனைத்தையும் கூடுதலாக கையிருப்பு வைத்திருக்க வேண்டும்.



நுரையீரல் பாதுகாப்பு

ஒட்டுமொத்தத்தில் நுரையீரல் பிரச்னை இருப்பவர்கள் புகையை ஏற்படுத்தும் பட்டாசுகளைக் கொளுத்துவதைத் தவிர்த்துவிட்டு உறவினர்களோடு உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியுடனும் தீபாவளியைக் கொண்டாடலாம்" என்றார் அவர்.

லேட்டஸ்ட் அப்டேட்களுக்கு விகடன் வாட்ஸ்அப் சேனலை Follow செய்யுங்கள் 👉 Click here

**இந்தக் கட்டுரைகளையும் படிக்கலாமே!**



**இன்றைய ராசிபலன்**

வார ராசிபலன்

**இந்த வார ராசிபலன்: நவம்பர் 14 முதல் 19 வரை #VikatanPhotoCards**



**Dhoni: தோனி வீட்டில் ரிஷப் பண்ட்; கலக்கலான தீபாவளி கொண்டாட்ட க்ளிக்ஸ்! | Photo Album**

Post a Comment

health pollution asthma Firecrackers diwali